Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 019 - பிப்ரவரி 13, 2022 முதல் பிப்ரவரி 19 , 2022 வரை.**

## பத்தொன்பதாவது வாரத்திற்கான வினாடிவினா

---

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

---

**கேள்வி 01**

தவக்காலத்தின் இரு பண்புகள் எவை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 50)

[ ] செபம் செய்தல், தவம் செய்தல்

[ ] திருமுழுக்கை நினைவிற்கொள்ளுதல், ஒப்புரவாதல்

[ ] நோன்பு இருத்தல், தவம் செய்தல்

[ ] ஏழைகளுக்கு உதவுதல், செபம் செய்தல்

**கேள்வி 02**

உரோமை வழிபாட்டு முறைக்கு உரிய இசையாகத் திருச்சபை எந்த இசையை ஏற்றுக்கொண்டுள்ளது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 53)

[ ] கிரகோரி இசை

[ ] கர்நாடக இசை

[ ] கிராமிய இசை

[ ] பாப் இசை

**கேள்வி 03**

சமூகத் தொடர்பு கருவிகளை திருத்தந்தை 12-ம் பியூ எவ்வாறு குறிப்பிட்டார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 64)

[ ] அருளின் கொடைகள்

[ ] கருணையின் கொடைகள்

[ ] கடவுளின் கொடைகள்

[ ] அன்பின் கொடைகள்

**கேள்வி 04**

கிறிஸ்து இயேசு நிறுவிய கத்தோலிக்க திருச்சபையின் முதன்மையான பணி எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 68)

[ ] போதிக்கும் பணி

[ ] செபிக்கும் பணி

[ ] நற்செய்தி அறிவிப்பு பணி

[ ] புனிதப் படுத்தும் பணி

**கேள்வி 05**

மனித இனம் முழுவதுமே மீட்பும், நிறைவும் பெறுமாறு கிறிஸ்தவர்களை பயிற்றுவிப்பதும், ஆற்றப்படுத்துவதும் யாருடைய கடமை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 68)

[ ] ஆயரின் கடமை

[ ] திருத்தந்தையின் கடமை

[ ] அருட்பணியாளரின் கடமை

[ ] நற்செய்தியாளரின் கடமை

**கேள்வி 06**

இரண்டாம் வத்திகான் சங்க ஏடு பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 68)

[ ] 1964 நவம்பர் 21

[ ] 1974 நவம்பர் 21

[ ] 1984 நவம்பர் 21

[ ] 1994 நவம்பா 21

**கேள்வி 07**

இரண்டாம் வத்திகான் சங்க ஏட்டின் முதல் இரண்டு இயல் எதைப் பற்றி கூறுகிறது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 84)

[ ] திருவழிபாடு

[ ] அருளடையாளங்கள்

[ ] திருச்சபை

[ ] அன்னை மரியாள்

**கேள்வி 08**

இயேசு உயிர்தெழுந்த பிறகு திருச்சபையை யாரிடம் ஒப்படைத்தார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 97)

[ ] தூய பவுல்

[ ] தூய யோவான்

[ ] தூய ஸ்தேவான்

[ ] தூய பேதுரு

**கேள்வி 09**

திருப்பணி நிலைக்குழுவின் தூய பண்பும், உயிர் அமைப்பும் எதன் மூலம் செயல்படுகின்றன? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 102)

[ ] திருச்சபை மூலம்

[ ] பொதுநிலையினரின் மூலம்

[ ] அருளடையாளங்கள் மூலமும், நற்பண்புகள் மூலமும்

[ ] அருட்பணியாளர்கள் மூலம்

**கேள்வி 10**

தூய ஆவியின் வல்லமையால் உறுதிப் படுத்தும் அருளடையாளம் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 102)

[ ] உறுதிப் பூசுதல்

[ ] திருமுழுக்கு

[ ] நற்கருணை

[ ] ஒப்புரவு

**கேள்வி 11**

எந்த அருளடையாளத்தின் மூலம் திருச்சபையின் உறுப்பினராகிறோம்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 108)

[ ] திருமணம்

[ ] உறுதிப் பூசுதல்

[ ] திருமுழுக்கு

[ ] ஒப்புரவு

**கேள்வி 12**

திருத்தூதர்களின் வழி மரபினர் என்று திருச்சபை யாரைக் குறிப்பிடுகிறது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 113)

[ ] அருட்பணியாளர்கள்

[ ] திருத்தொண்டர்கள்

[ ] அருட்சகோதரிகள்

[ ] ஆயர்கள்

**கேள்வி 13**

திருத்தூதர்களுக்குத் தலைவராக கிறிஸ்து யாரை நியமித்தார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 113)

[ ] தூய பேதுரு

[ ] திருத்தந்தை

[ ] தூய சவேரியார்

[ ] தூய தோமையார்

**கேள்வி 14**

ஆயர்களுக்கு செவி சாய்ப்பவன் யாருக்கு செவி சாய்க்கிறான்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 116)

[ ] புனிதர்களுக்கு

[ ] கிறிஸ்துவுக்கு

[ ] திருத்தந்தைக்கு

[ ] திருச்சபைக்கு

**கேள்வி 15**

ஆண்டவர் தம் மக்களின் அருட்பணியாளர்களிடத்தில் ஒப்படைத்த பணி விவிலியத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 124)

[ ] திருப்பணி அல்லது தொண்டு

[ ] ஆன்மீகப் பணி

[ ] சமூகப் பணி

[ ] போதிக்கும் பணி

**கேள்வி 16**

முறையான எல்லா நற்கருணை கொண்டாட்டங்களையும் ஒழுங்கு படுத்துபவர் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 128)

[ ] அருட்பணியாளர்

[ ] திருத்தந்தை

[ ] ஆயர்

[ ] திருத்தொண்டர்

**கேள்வி 17**

"இரக்கம் உள்ளவர்களாகவும் கடமையில் கருத்து உள்ளவர்களாகவும் எல்லோருக்கும் பணியாளராக மாறிய ஆண்டவரைப் பின்பற்றி நடப்பவராகவும் இருங்கள" என்று அறிவுரை கூறியவர் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 135)

[ ] தூய பேதுரு

[ ] தூய பொலிக்கார்ப்

[ ] தூய தோமையார்

[ ] தூய யோவான்

**கேள்வி 18**

கிறிஸ்துவை எல்லோருக்கும் வெளிகாட்டுவதற்கு யார் அக்கறையுடன் முயல வேண்டும்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 161)

[ ] பொது நிலையினர்

[ ] திருச்சபை

[ ] துறவிகள்

[ ] அருட்பணியாளர்கள்

**கேள்வி 19**

அருளனைத்திற்கும் இறைமக்களது வாழ்விற்கும் ஊற்றும் தொடக்கமுமாய் உள்ளவர் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 167)

[ ] இயேசு கிறிஸ்து

[ ] தூய ஆவி

[ ] அன்னை மரியாள்

[ ] புனிதர்கள்

**கேள்வி 20**

சீயோனின் மாண்புமிக்க மகள் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 172)

[ ] மதலேன் மரியாள்

[ ] அன்னை மரியாள்

[ ] வேறோணிக்கம்மாள்

[ ] எலிசபெத்

**கேள்வி 21**

“மரியா தன் கீழ்படிதலால் தானும் மனித இனம் அனைத்தும் நிறை வாழ்வு பெறக் காரணமானார்” என்று கூறியவர் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 173)

[ ] புனித இரேனேயு

[ ] புனித லாரன்ஸ்

[ ] புனித பேதுரு

[ ] புனித எரோணிமுஸ்

**கேள்வி 22**

மெய்யான இறைப்பற்று எதிலிருந்து பிறக்கிறது?

(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 182)

[ ] உண்மையான நம்பிக்கையிலிருந்து

[ ] உண்மையான அருளிலிருந்து

[ ] உண்மையான அன்பிலிருந்து

[ ] உண்மையான வாழ்விலிருந்து

**கேள்வி 23**

மக்களின் ஒலி யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 87)

[ ] அன்னை மரியாள்

[ ] தூய ஆவி

[ ] இயேசு கிறிஸ்து

[ ] புனித யோவான்

**கேள்வி 24**

“விண்ணக எருசலேம்” என்று அழைக்கப்படுவது எது?

(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 93)

[ ] திருச்சபை

[ ] ரோம்

[ ] கானான்

[ ] பெத்லகேம்

**கேள்வி 25**

இரண்டாம் வத்திகான் சங்கம் வெளியிட்ட ஏடுகளை அது வெளிவந்த ஆண்டுக்குள்ளேயே இந்திய மொழிகளிலே முதன் முதலாக தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட கல்லூரி எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - அணிந்துரை)

[ ] திருச்சி புனித ஜோசப் கல்லூரி

[ ] திருச்சி புனித பவுல் இறையியல் கல்லூரி

[ ] திருச்சி புனித சிலுவை கல்லூரி

[ ] புனித சேவியர் கல்லூரி

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.